முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 27-9-57 | வெள்ளி | ஒலி 23

முழங்குது முரசம்; வீங்குது தோள்! இந்தி மொழியே; நீ தூள்! தூள்!

அருமைத் தமிழா!

"இந்த நாட்டு மக்களுக்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை ஊட்டவும், இந்த நாட்டுத் தாயகமொழி தமிழைக் காப்பாற்றவும் இந்தி நமக்கு இம்மியளவும் அவசியமில்லை யென்பதை எடுத்துரைக்கவும், அதற்கான கருத்துரைகளைப் பரப்புவதற்கான பணிகளை இன்றிலிருந்தே நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"எனவேதான், முதற் கட்டமாக அக்டோபர் மாதம் 13-ம் நாள் ஞாயிறன்று 'இந்தி எதிர்ப்பு நாள்' என்ற நாளைக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதை அறிக்கையாக நான் விடுப்பதற்கிருக்கிறேன். எனவே அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை, இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டு, நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள் அத்தனையிலும், கழகச் சொற்பொழிவாளர்கள் அத்தனை பேரையும் வரவழைத்து, கழகச் சொற்பொழிவாளர்கள் வர இயலாத இடத்திலே ஆங்காங்குள்ள தோழர்களே கட்டாயம் ஊர்வலம் நடத்தி, ஒலி முழக்கம் செய்து, கூட்டங்கள் போட்டு, இத்தகைய கருத்து விளக்கங்களை நாட்டு மக்களிடையே பரப்பி, எதிர்காலத்தில்—இந்தி எதிர்ப்புப் போராட்டம் வருகிற காலத்தில்—அதற்கான வீரர்கள் படையைத் திரட்டுகிற அளவிலே, நல்ல பல கருத்துரைகளை எடுத்துக் கூறுகின்ற நாளாக அக். 13-ந் தேதி, ஞாயிற்றுக்கிழமையைக் கொள்ள வேண்டுமென்று கழகத் தோழர்கள் அத்தனை பேரையும், பொது மக்களையும், இந்தி எதிர்ப்புணர்ச்சியிலீடுபட்டிருக்கிற அந்தனை பேரையும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்"

—என்று நமது பொதுச் செயலாளர் போர்ப்பறை அறிவித்திருக்கிறார்!



மொழியை உயிரெனக் கருதும் தமிழா! உன் உயிருக்கு ஆபத்து வந்து விட்டது! இதை உணர்ந்துகொள். இல்லையேல் அழிந்து போவாய்—என்று திருவண்ணாமலையில் அபாய அறிவிப்பு விடுத்த அறிஞர் அண்ணா—பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்!

அருமை நண்பா! பண்டைக் காலத்தில் வேற்று மன்னனைப் போருக்கு அழைக்க வேண்டுமெனில் இப்போது செய்வதைப்போல் முன்னறிவிப்பின்றி படை கொணர்ந்து மோதமாட்டார்கள். ஆரியம் வந்து புகாத வீட்டுக்கு ஒரு வீரரைப் போர்க்களத்திற்கு அழைப்பது தான் போர்ப்பறை. வரவிருக்கும் மொழிப் போருக்குத் தேவையான வாள்களையும், வேல்களையும் தயாரித்திட—தயாரித்தவற்றைக் கூராக்கிட வருகின்ற 13-ந் தேதி முதலே நீயும் நானும் நமது குடும்பத்தவர்களும் தயாராகிவிட வேண்டும்!

அந்த நாள் அல்லவா? அதனால் தான் எல்லையோரத்திலேயே முகாம் அமைத்து; வேற்றரசன் காட்டிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டுவார்கள்!

காட்டிலே மரம் வெட்டும் ஒலி நாட்டிலே எதிரொலிக்கும்! மறவர் குல மாணிக்கங்களின் செவிப்பறைகளைக் கிழிக்கும்!

மானம் பெரிதென நினைப்பவர்களாயிற்றே தமிழர்கள்! அதனால்தான் 'வீரத்துக்குச் சோதனை வந்து விட்டதெனக் கொண்டு—வேல் கைகொண்டு—வெற்றிவாகை சூடிடும் ஆசையில் ஓடிடுவர்!

நண்பா! இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் கெர் கமிஷன் அறிக்கை கிளப்புகிற ஒலி, உண்மையிலேயே நமது கன்னித் தமிழ் நாட்டின் எல்லையிலே இருக்கும் நமக்குச் சொந்தமான காடுகளைக் கூரான கோடரி கொண்டு பிளக்கும் பொல்லாத ஒலியாகும்!

—போருக்கு வா என்று பகைவர் அழைத்த பின்பும் நேருக்கு நேர் நின்று வாழ்வு சாவை நிர்ணயிக்க முடியாமலிருப்பது அகத்துக்கு ஏற்பட்ட இழுக்கு! புறத்துக்கு ஏற்பட்ட மாசு! திருக்குறள் மேல் தூவப்படும் தூசு!

நண்பனே! வருகின்ற 13-ம் தேதியை இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடிட நீ மறவாதே!

தூங்கும் புலியே, எழுந்திடு! இன்று விழிக்கவில்லையேல் இனி என்றுமே நீ விழிக்கமாட்டாய்!

★ உள்ளே ★

திருவண்ணாமலை — மாநாட்டுப் படங்கள்

கட்டபொம்மன் — (நாடக விமர்சனம்)

கற்பனை உரையாடல்

பிள்ளையாரும் பிள்ளையும்!

[ஸ்ரீமான் கணபதி அவர்கள், கடைசியில் தன் மகனைத் தேடிக் கண்டு பிடித்து விட்டார்! அவரது மகன் குளத் தங்கரையிலே களிமண் உருண்டைகள் உருட்டி பிள்ளையார் செய்து கொண்டும், உல்லாசமாக "தொந்தி விநாயகனே! மூஞ்சூறு வாகனனே" எனப் பாடிக்கொண்டும் அமர்ந்திருக்கிறான்.]

கணபதி: ஏலே பாலு! இங்கே என்னடா வாலுத்தனம் செய்து கொண்டிருக்கே? அட முட்டாள் பய மவனே! உன்னைப் படிக்க வைத்து, அறிஞனாக்கி அகிலமெல்லாம் சுற்றிவரச் செய்ய வேண்டுமென நான் கனவுகள் காண்கிறேன்! நீ என்னடான்னா களிமண் உருண்டை பிடிக்கிறாய்! இப்படி இருந்தால் நீ எப்படியடா பரீட்சையில் முதல்வனாகப் பாஸ் செய்வாய்? நீ முதல் மார்க்கு வாங்கினால்தானடா மேல் நாட்டுப் படிப்பு படிக்கச் செல்லலாம்!

பாலு: அட போப்பா! எனக்கெதற்கு மேனாட்டுப்படிப்பு? நான்தான் நேற்றே உலகம் சுற்றிய அறிஞனாகி விட்டேனே!

கணபதி: என்ன, நேற்றே உலகத்தைச் சுற்றி வந்துவிட்டாயா?...உலகத்தைப் போலக் களிமண் உருண்டை செய்து. அதைச் சுற்றி வந்தாயா? அல்லது கனவு கண்டாயா?

பாலு: இல்லையப்பா! உண்மையிலேயே உலகத்தைச் சுற்றி வந்தேன்! ஒரு வினாடியில் உலகத்தைச் சுற்ற என்னால் இயலும்! ஏங்கே, எனக்கு சினிமாவுக்குப் போக காசு கொடுப்பதாக வாக்களித்தால் நான் இப்பொழுதே—உங்கள் கண் முன்னாலேயே—உலகத்தைச் சுற்றிக் காட்டுகிறேன் — பாருங்களேன்!

கணபதி: (மகனின் புத்தி கூர்மையான பதிலைக் கண்டு ஆச்சரியத்துடன்) சரி! எங்கே பார்க்கலாம்!

[அவ்வளவுதான்; மின்னல் வேகத்தில் பாலு தன் தந்தையைச் சுற்றி ஒருமுறை வலம் வந்து, அவர் முன்னால் கரங்கள் கூப்பி 'சாஷ்டாங்கமாக' விழுந்து வணங்கினான்.]

பாலு: அப்பா! சுற்றிவிட்டேன்! கடவுள் செய்த பெரிய காரியத்தை நானும் செய்துவிட்டேன்! உலகத்தையே ஒரு நொடியில் சுற்றி விட்டேன்! எங்கே அப்பா காசு? "பிள்ளையார் திருவிளையாடல்கள்!" சினிமாப் பார்க்க இப்பொழுதே போய் 'க்யூ'வில் நிற்க வேண்டுமே!

கணபதி: (ஆத்திரத்துடன்) அட மூஞ்சூறு! முட்டாளே! விநாயகப் பெருமானைப் பழிப்பதாக உன் எண்ணமோ! சரி; அதையாவது சரியாகச் செய்து காட்டினாயா? என்னை மட்டும் சுற்றி வந்தால் போதாதடா மண்டூகம்! உன் அம்மாவையும் ஒரு முறை சுற்றிவர வேண்டும்!

பாலு: அம்மாவைச் சுற்றுவது அநாவசியம்! உலகம் சுற்றிய அறிஞன் நானே கூறுகிறேன் —"அப்பாவே உலகம்!" என்று — என்னை அந்தத் தொந்தி விநாயகர் வந்தாலும் வெல்ல இயலாது!...சரி; சரி! நேரமாகிறது! எடுங்கள் காசை! கொடுங்கள் என்னிடம்! மயிலேறி உலகைச் சுற்றிவந்து ஏமாந்த முழு முட்டாள் முருகனைப்போல, மாயமாக—மிக மிக வேகமாகச்—சினிமாத் தியேட்டருக்குச் செல்ல வேண்டும்!

["பட் — படார் — பளார்!" —பாலுவின் முதுகிலே பலமான உதை விழுகிறது!]

கணபதி: உரித்த வாழைப் பழச் சோம்பேரி! வடிகட்டிய முட்டாள்! இவன் போய் கடவுளை முட்டாளென்கிறான்!

பாலு: (அழுது கொண்டே) ...ஊம்!...கடவுள் செய்தால் அது அறிவின் சிகரம்! கடவுள் திருவிளையாடல்களை நான் அப்படியே பின்பற்றினால் அது கயமைத்தனம்! உங்கள் கடவுள் கணபதி மட்டும் மிகவும் சுறுசுறுப்பானவர்; நான் மட்டும் சோம்பேரியாக்கும்!

[பாலுவின் முதுகில் மேலும் இரண்டு உதைகள் விழுகின்றன. கணபதி, பாலுவை வீட்டுக்கு இழுத்துச் செல்கிறார்.]

கணபதி: போடா தடியா! போய் உன் கணக்குப் புத்தகத்தையும் நோட்டையும் எடுத்து வா பார்க்கலாம்!

[பாலு நடுநடுங்கிக்கொண்டே புத்தகத்தையும் நோட்டையும் எடுத்து வருகிறான். கணபதி அவைகளை வாங்கிப் புரட்டிப் பார்க்கிறார்.]

கணபதி: (புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து திடுக்கிட்டவராய்) டேய்! இது என்னடா இது; புதுப் புத்தகம் முழுவதும் பாழாக்கி விட்டாயே! ஒரு எழுத்துக்கூட தெரியாமல் ஓரே சரஸ்வதி ஓட்டுப் படமாக ஒட்டிவைத்திருக்கிறாயே! சந்தனத்தையும் குங்குமத்தையும் இப்படியா புத்தகம் முழுவதும் அப்பி வைப்பது?

பாலு: ...அது...வந்து...சரஸ்வதி பூஜையில் வைத்திருந்த புத்தகமப்பா! பூஜை அறையிலிருந்து அந்த சனியனை இனி எடுத்துத் தொட்டுக் கூடப் பார்ப்பதில்லையென முடிவு செய்திருந்தேன்!...... உங்கள் உதைக்குப் பயந்துதான் எடுத்து வந்தேன்!

கணபதி: (நோட்டைப் புரட்டிப் பார்த்துவிட்டு) ஏலே! இது என்னடா ஒரு குயர் நோட்டு முழுவதிலேயும் இப்படிக் கிறுக்கி வைத்திருக்கிறாய்? ஒரு கணக்குக்கூடப் போடாமல் ராமஜெயம்—ஓம்—கடவுள் துணை—கணபதி துணை—முருகன் துணை! அட இதுஎன்னடா, இரண்டு பக்கத்திற்கு ஒரே பிள்ளையார் சுழியாக போட்டுத் தள்ளியிருக்கிறாயே! நல்லாயிருக்குடா நீ படித்துக் கிழிக்கிற இலட்சணம்!

பாலு: (நடுநடுங்கிக்கொண்டே) வாத்தியார்தானப்பா சொன்னார்! "கடவுள் மேல் நம்பிக்கை வை! சரஸ்வதியை அனுதினமும் வழிபடு! தெய்வங்களுக்குத் தேங்காய் உடை! சரஸ்வதி தானாகவே வருவாள்!" என்றெல்லாம் கூறினாரப்பா! அதனால்தான் பக்தியின் முதிர்ச்சியிலே அப்படியெல்லாம் செய்துவிட்டேன்!

கணபதி: ஊம்! இப்பவே முட்டாளாக இருந்தால் வருங்காலத்திலே எப்படியடா நாலு காசு சம்பாதிக்க முடியும்?

பாலு: விட்டுத் தள்ளுங்கள்! அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்! என் பக்தி வீண் போகாது! லட்சுமி இருக்கவே இருக்காள்!

கணபதி: என்ன? லட்சுமியா? யார் அது? உன் சித்தி லட்சுமியை நம்பிக் கொண்டு இருக்கிறாயா? அவள் ஒரு செல்லாக் காசுகூட உனக்குத்தர மாட்டாள்! ஆமா!

பாலு: சே! அவள் இல்லையப்பா! கொடுக்கிற தெய்வம்—கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கிற தெய்வம்—மூதேவியின் சகோதரி லட்சுமியை கூறுகிறேன்! என் பக்திக்கு இரங்கி அவள் சகல ஐஸ்வரியங்களையும் எனக்கு நிச்சயம் அருள்வாள்!

கணபதி: பேஷ்! பேஷ்! அப்பா, மகனே! நீ இப்படியிருந்தால் நம் குடும்பம் நன்றாக முன்னேறி விடும்!...ஊம்!... நீ எப்படியடா இந்த உலகத்தில் வாழப் போகிறாய்?

பாலு: அநாவசியம்!......நான் எதற்காக வாழவேண்டும்? ஏனப்பா வாழவேண்டும்? வாழ்வாவது மாயம்! நாமனைவரும் மண்ணாவது திண்ணம்!

"நந்த வனத்திலோர்
ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்
குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு
தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி!"

கணபதி: நிறுத்தடா உன் பாட்டை! நீ என்ன முற்றுந் துறந்த முனிவரோ?

[அப்பொழுது பாலுவின் அன்னை, அழகாக அலங்கரித்துக்கொண்டு அந்தப் பக்கமாக வருகிறாள்.]

பாலு: இல்லையப்பா! உலக இன்பத்தை நான் இன்னும் அனுபவிக்கவில்லையே! விநாயக் கடவுளுக்கே தோன்றிய அந்தச் சிறு ஆசை அடியேன் உள்ளத்திலும் எழுவது இயற்கைதான்!

பாலுவின் அம்மா: என்னடா பாலு; ஏதோ வேதாந்தம் பேசுகிறாய்! என்னடாப்பா உன் உள்ளத்தில் உதித்த அந்தச் சிறு ஆசை?

பாலு: அம் அம்மா! ஈடு இணையற்ற அழகியாக—கொவ்வைக் கனி உதடும் கயல் விழியும் கொண்ட உன்னைப் போன்ற அழகான ஒரு பெண்ணைப்பார்த்து எனக்கு உடனே திருமணம் செய்து வைக்கத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்!

[இதைக் கேட்ட பாலுவின் அன்னை பத்ரகாளியாகி பாலுவை நையப் புடைக்கிறாள்!......"அப்படியென்று நான் கூறவில்லையம்மா! விநாயகர், பார்வதியிடம் கேட்டதாக வாத்தியார் சொன்னாரம்மா!...என்னைக் கொன்று விடாதே அம்மா!" என்று கதறிக்கொண்டே பாலு ஓடி மறைகிறான்.]

—"இன்ப புரியான்"

புதிய நாடகம்

28—9—57 சனிக்கிழமை

ஆத்தூர், ஸ்ரீதரன் டாக்கீசில்

மு. கருணாநிதி

அவர்கள் தலைமையில்

மாலை 7—30, இரவு 10—30 மணிக்கு

திரு. ப. கண்ணன். அவர்கள்

தீட்டிய பைந்தமிழ் வரலாற்று நாடகம்.

நந்தி வர்மன்

கவிதைகள்: நந்திக்கலம்பம். பாடல்கள்: 'அருண்'

வெள்ளி 27—9—57 சென்னை

புள்ளி விபரம்!

"சொல்வது எளிது; செய்வது கடினம்."

—இது பழமொழி!

"வேறெந்த நாட்டையும்விட இந்தியாவில்தான் பேச்சு அதிகம்."

—இது பண்டிதர் மொழி!

மழை பெய்ய வேண்டுமென்பதற்காக 'மரம்' நடுவார்கள். அது வளர்ந்து உயர்ந்து நினைத்த பலனைத் தருவதற்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்; அது எந்தத் தலைமுறையில் சாத்தியமாகும் என்பதை மறந்துவிடுவார்கள்.

உணவு உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம். அடுத்த ஆண்டு முதல் வெளி நாட்டிலிருந்து கட்டாயம் உணவு இறக்குமதி செய்யப்பட மாட்டாது.

—இப்படி மேடைதோறும் முழங்கிக் காட்டுவார்கள் அமைச்சர்கள்!

ஆனால் நிலைமை என்ன?

பண்டிதரே 'வருத்தப்படுகிறேன்; உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன்' என்று ஒப்புக்கொள்கிற அளவுக்கு உணவு நிலைமை மோசமாகிவிட்டது.

—'புள்ளி விபரம் தேவை! புள்ளி விபரம் தேவை!' என்று மற்றவர்களைப் பற்றிப் புலம்புபவர்கள்தான் இந்தப் புள்ளி விபரங்களையெல்லாம் மனத்துட் கொள்ளாமல்; வருவதைச் சிறிதும் உணர்ந்து பாராமல்; 'அடுத்த ஆண்டில் இந்தியா சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் என்று முன்பு வாய்ப்பறை அடித்தார்கள்!

இவர்கள் சட்டசபையில் நம்மை நோக்கி புள்ளி விபரம் தாருங்கள் என்று சுடு சொல் வீசுகிறார்களே; அவர்கள் கூடாரத்திலே அந்தப் புள்ளி விபரத்துக்கு என்ன மதிப்பு இருக்கிறது?

"உலகத்திலே மூன்று விதப் பொய்கள் இருக்கின்றன. ஒன்று சாதாரணப் பொய். இரண்டாவது பிரமாண்டமான பொய். மூன்றாவது புள்ளி விபரம்"—என்ற மேல் நாட்டு அறிஞர் ஒருவரின் பொன்மொழியை மட்டும் திருப்பிச் சொல்லவில்லை அதையும்விட ஒரு படி தாண்டிச் சென்று, ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் நமது நிதியமைச்சர் மோகிக்கும் புள்ளி விபரங்களைச் சாடியிருக்கிறார்:

"தற்கால புள்ளி விபரங்களை நான் மதிப்பதில்லை—என்பதுடன் அவற்றில் எனக்கு நம்பிக்கையும் கிடையாது. அவை எப்போதும் தவறாகவே இருக்கின்றன; மேலும் அரசாங்கத்தின் புள்ளி விபரங்கள், நம்பவே முடியாதவையாயிருக்கின்றன. இந்த நிலைக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியவில்லை.

"புள்ளி விபரம் சேகரிக்கும் அதிகாரிகளின், நிபுணர்களின் இடைவிடா முயற்சிக் குறைவு இதற்குக் காரணமாயிருக்கலாம்; அல்லது புள்ளி விபரம் சேகரிக்கும் முறையிலேயே தவறு அல்லது குறைபாடு இருக்க வேண்டும்."

இப்படித் தவறுகளும் குறைபாடுகளும் மலிந்த புள்ளி விபரங்களை ஆதாரம் காட்டினால்தான் ஏற்றுக் கொள்வேன் என்கிறார், சென்னை மாநிலத்து நிதியமைச்சர்!

புள்ளி விபரங்கள் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும்; ஏற்றத் தாழ்வகளையும் விளக்கிக் காட்டும் கண்ணாடி என்பதை அமைச்சர் சஞ்சீவியார் ஏற்றுக் கொள்ள வில்லையாம்!

ஆமாம்; பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது என்பதற்கு ஏட்டுக் குறிப்புத் தேவையில்லை. அதை மக்கள் மன்றமே கண்கூடாக உணர்ந்து கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும்.

குழந்தையின் எடை முன்னைவிட இத்தனை பவுண்டு அதிகரித்திருக்கிறது—என்பதைக் காட்டுவதற்கு வெறும் எண்ணிக்கையைக் கூறி மட்டும் என்ன பயன்? அதைக் குழந்தையைத் தூக்கி வளர்க்கும் தாயல்லவா உணரவேண்டும்!

—அதனால்தான் இது போன்ற சங்கடமான சந்தர்ப்பங்களில் ஆளவந்தார்கள் புள்ளி விபரங்களை உபயோகித்து; அதன் மூலம் ஏட்டுச் சுரக்காயைக் காட்டி மக்களது வயிற்றுப் பசியைத் தீர்க்க முயற்சிக்கிறார்கள்!

ஆட்சியாளர்கள் புள்ளி விபரங்களை நிலைமை விளக்கத்திற்காகப் பயன்படுத்துவதில்லை; நிலைமையைக் குழப்புவதற்காகத்தான் பயன்படுத்துகிறார்கள்!

இந்திய உபகண்டத்து அரசியலிலே இப்படி வளர்ந்து வரும் இந்தத் தொத்து நோயைத்தான் இங்கு முன்னாள் கலெக்டராயிருந்த **இல்ட்டன் பிரவுன்** என்னும் ஆங்கிலேயர் 22—9—57 'இந்து' ஞாயிறு மலரில் சிறப்புற எழுதியிருக்கிறார்; எதிர்பார்க்கும் இலக்குகள் கைகூடாமல் போவதற்கு அவர் அருமையான காரணங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்:

முதலாவது, செய்யப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிற காரியத்தை செய்து முடிக்கப்பட்டுவிட்டதாகக் கருதும் பழைய காலத்திய இந்திய வழக்கம்... உதாரணம்—"சமுதாய சமத்துவம்!" இரண்டாம் வகுப்பு ரயில் பெட்டிகளை அவற்றில் உள்ள எந்தவித மோசமான நிலைமைகளையும் சீர்திருத்தாமல் 1-என்று எழுதுவதன் மூலமாகவே முதல் வகுப்புப் பெட்டிகளாக மாற்றியிருக்கிறார்கள். அடுத்தது "சமுதாய முன்னேற்றம்"—மண்ணெண்ணெய் 'டின்'களால் ஆன குடிசைகளைக் கொண்ட 'காலனி'களை அமைத்துவிட்டு அவைகளை 'ஹரிஜன் காலனி' என்று அழைப்பது. (என்னால் இதுபோல் இரண்டைக் காட்டமுடியும்.) அடுத்தது "பிரயாணிகள் கவர்ச்சி"—தன்னுடைய காருக்கு மதிப்பு வைத்திருப்பவன் உபயோகிக்க அஞ்சும் விதத்தில் வடிகால் இல்லாத மோசமான சாலைகளை அமைத்துவிட்டு அவைகளைக் குறிப்பிட்ட மலைக்குச் செல்ல அமைக்கப்பட்ட அருமையான மோட்டார் பாதை என்று அழைப்பது.

இரண்டாவதாக நிரந்தரப் பாதுகாப்புக்கென்று செலவுத் தொகை ஒதுக்காமல் மூலதனச் செலவுக்காகப் பணத்தை ஒதுக்குவது. உதாரணம்—கிராமத்துச் சாலைகள்!

இவைகள் எல்லாம் சாதாரண விஷயங்களாக இருக்கலாம். இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் கண்துடைப்பு என்பது கண்கண்ட தெய்வம்தான். ஆனால் பெரிய அணைகள் பாலங்கள் விஷயத்திலும் இது போலவே இருக்குமோ என்று நினைக்கும்போதுதான் பயப்பட வேண்டியிருக்கிறது. உண்மையில் அவைகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுபவைகளா? அல்லது உண்மையிலேயே செய்து முடிக்கப்பட்டவைகளா? சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையிலே இரு திடுக்கிடத்தக்கச் செய்திகளைப் படித்தேன்; ஒன்று கடப்பை—கர்நூல் கால்வாயில் ஏற்பட்ட கசிவைப் பற்றியதாகும். அடுத்தது கோய்னா இலாக்காவிற்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களில ஏற்பட்ட சீரழிவாகும். இதுபோல் சில சதவீதம் நடைபெற்றாலும் போதும்; நாம் அழிந்தோம்! நாம் அதையே திரும்பவும் இரண்டு தடவைகள் செய்யமுடியாது!

—இல்ட்டன் பிரவுன் முன்பு இங்கேயே கலெக்டராக வேலை பார்த்து நற்பெயர் பெற்றவர் அவர்தான் தன்னுடைய நிர்வாக அனுபவத்தால் ஏற்பட்ட நுண்ணறிவோடு கூறுகிறார், இப்படி!

1-என ஒரு கோடு இழுத்துவிட்டு இரண்டாம் வகுப்புப் பெட்டிகளை முதல் வகுப்புப் பெட்டிகளாக உயர்த்திவிட்டோம் என்று பீற்றிக் கொள்வது—

மண்ணெண்ணெய்த் தகரத்தால் கொட்டகை அமைத்துக் கொடுத்துவிட்டு; அவற்றை ஹரிஜன் காலனி என்று புகழ்ந்துகொள்வது—

வடிகால் இல்லாத தற்காலிகச் சாலைகளை அமைத்துவிட்டு பெரிய சாதனை என்று தம்பட்டம் தறுகித் திரிவது—

கசிவு உள்ள கால்வாய்கள்—

விரைவிலே இடிந்துபோகக்கூடிய கட்டிடங்கள்—

இவைதான் இன்றைய திட்டங்கள்மூலம் காங்கிரஸ் கட்சி நாட்டுக்குச் செய்துவரும் சாதனையாக இருந்துவருகிறது.

—இப்படி புரையோடிப்போயிருக்கும் புண்ணை மறைப்பதற்குத்தான் 'புள்ளி விபரம்' என்னும் புனுகு தடவுகிறார்கள், ஆட்சியாளர்கள்!

அய்யோ புள்ளி விபரமே! நீ இவர்கள் கையில் சிக்கிக்கொண்டு இப்படியெல்லாமா தவறான வழிகளில் பயன்படவேண்டும்?

★★★

திருவண்ணமலை தீபச் சுடர் தித்திக்கும் தீர்மானங்கள்!

திருவண்ணமலையில் திருவிழா போல கூடிக் கலையவில்லை. நமது திராவிட சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் ஏற்றதான தித்திக்கும் தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். அவைதான் இங்கு தரப்பட்டிருக்கின்றன:

1. அனுதாபத் தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரரும், நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளரும், தொழிற் சங்கங்களின் தலைவருமான தோழர் கே. வி. கே. சாமி, தூத்துக்குடியில் கழகத்தின் அரும்பணி ஆற்றிவந்த தோழர் தாளமுத்து ஆகியோரும், நாதசுர இசைப் பெரும் புலவராய் விளங்கிக் கலைத் துறையில் அரும்பணி ஆற்றிவந்த திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களும், நகைச்சுவை மன்னரும், தி. மு. கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு விளங்கிய் வரும், பெரு வள்ளலும் ஆகிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், வேலூர் ஆதிமூலம், வந்தவாசி தங்கவேலு ஆகியோரும் மறைந்தது குறித்து இம்மாநாடு மிக்க துன்பமும் துயரமும் கொள்வதோடு தன் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார்களின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர், ஆகியோருக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்.

2. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகம், முதன் முதலாகப் போதுமான வசதியற்ற நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் ஈடுபட்டபோதிலும், தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்களான வாக்காளர்கள், மாற்றுக் கட்சிகளின் பலமான தூற்றலையும் பழி சுமத்தலையுங்கூடப் பொருட்படுத்தாமல், 17 இலட்சம் வாக்குகளை அளித்து, கழகத்திற்குக் குறிப்பிடத்தக்க வெற்றி தேடித் தந்ததற்காக இம்மாநாடு வாக்காளர் பெருமக்களைப் பாராட்டுவதுடன் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

—தலைவர்.

3. முதுகுளத்தூர் வகுப்புக் கலவரம்

இராமநாதபுர வட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டங்களைச் சார்ந்த சிற்றூர்களின் வகுப்புக் கலவரங்கள் மூண்டு—கொலை—கொள்ளை—தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அச்சங்கொண்டு, அவதியுற்று, ஊரைவிட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு இம்மாநாடு துயரமும் வருத்தமும் கவலையும் அடைவதுடன், காலா காலத்தில் தலையிட்டுத் தவறான வகுப்புணர்ச்சி தலைதூக்காமல் அமைதியை நிலைநாட்ட சென்னை அரசியலார் முயலாமல், கலவரங்களினால் கொலைகள் ஏற்பட்டது போதாதென்று, போலீசார் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்து மேலும் சிலரைச் சுட்டுத் தள்ளியிருப்பது கண்டு வருத்தங் கொண்டு அச்செய்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு, அரசியலார் இதுவரையில் கையாண்டு வருகிற முறைகள் கலவரங்களை வளர்ப்பதாகவே இருக்கிற காரணத்தால், கலவரப் பகுதிகளுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட சர்வ கட்சித் தலைவர்களைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை நிறுவி, நிலைமை சீரடைவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல்: எஸ். முத்து.
வழிமொழிதல்: கள்ளக்குறிச்சி நடராசன் எம். எல். ஏ.

4. ஐந்தாண்டுத் திட்டம்

தென்னாட்டை வஞ்சித்து வடநாட்டை வளமாக்கும் முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்ட டில்லி ஆதிபத்தியம், இப்பொழுது அதற்கான நிதி நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில், பெரிதும், முக்கியமானதுமான திட்டங்களை மட்டும் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, வடநாட்டில் போடப்பட்டுள்ள பெருந் திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதில் மிக்கக் கவனமாக இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் தொழில் துறையில் தாழ்ந்துள்ள தென்னாட்டை வளப்படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்குமாறு இம்மாநாடு டில்லி அரசை வற்புறுத்துகிறது.

முன்: என். எஸ். இளங்கோ
வழி: கி. மனோகரன்

5. விலைவாசி ஏற்றம்

பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களைத் தொடர்ந்து போட்ட காரணத்தாலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் வடநாட்டில் மட்டும் பெருவாரியான பணத்தைக் கொட்டிய காரணத்தாலும், பணப் பெருக்கம் உண்டாகி விலைவாசிகள்—குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதை இம்மாநாடு கவலையோடு கவனிப்பதுடன், பணப் பெருக்கத்தைத் தணிக்கவும், செலவினங்களை எல்லாப் பகுதிகளிலும் ஏற்ற அளவு பகிர்ந்திடவும், உணவுப் பொருள்களின் விலைகளைத் தக்கமுறையில் கட்டுப் படுத்தவும் வேண்டும் என இந்திய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. கே. நீலமேகம்
வழி: பாண்டிச்சேரி வழக்கறிஞர் எஸ். பெருமாள்
ஈ. ஆர். கிருஷ்ணன்

6. வரிக் கண்டனம்

வாழ்க்கைத் தரம் குறைந்து, விலைவாசிகள் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்திருக்கும் நிலையில், பெருவாரியானப் பொது மக்களைப் பாதிக்கும்படி நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆண்டுதோறும் நூறு கோடி ரூபாய் அளவுக்கு புதிய வரிகளைப் போட்டுள்ளதானது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கி இருப்பதனால் இந்தியப் பேரரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், "செலுத்தக் கூடியவர்கள் மீது மட்டுந்தான் வரி போடுவோம்" என்று தேர்தல் காலத்தில் கூறிய காங்கிரசுக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு வரியை ஏழைகள் பயன்படுத்தும் பண்டங்கள் மீது சுமத்தியிருக்கும் முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுவதுடன், ஏழைகளைப் பாதிக்கும் இக்கொடும் வரிகளை நீக்குமாறு இந்தியப் பேரரசை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,
வழி: ஆனந்தன் எம். எல். ஏ.,
பாலகுருசாமி

7. கைத்தறி

தேர்தல் காலத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு உறுதிமொழிகள் பல தந்து, அவர்களுடைய ஆதரவைத் தேடிப் பெரும்பான்மைவெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், அதே கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பிற்கு என்று, 'கரைபோட்ட வேட்டியும், கலர்ப்புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டும்' என்ற தீர்மானம் சென்னை சட்டமன்றத்தில் வந்தபோது, தமது கட்சி கட்டுப்பாட்டிற்காக அதை எதிர்த்து வாக்களித்த செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், கைத்தறி நெசவுத் தொழிலாளர் பாதுகாப்புக்கு நிரந்தரமான ஒரு திட்டத்தை இந்த அரசியலார் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்: ப. கண்ணன்
வழி: காஞ்சி-மணிமொழியார்
முத்துக் கருப்பன்

8. தமிழ்நாடு பெயரிடுதல்

தமிழ் மக்களின் தாயகமான தமிழகத்திற்குச் 'சென்னை ராஜ்யம்' என்று வழங்கும் பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்றே பெயரிட பல ஆண்டு காலமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டும், சென்னை சட்ட மன்றத்தில் அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தபோதுங்கூட ஆளும் கட்சியினராகிய காங்கிரசார், பொது மக்களின் விருப்பத்தை மதியாது மாறாக நடப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் பொது மக்களின் விருப்பத்தை அவமதித்துப் பொறுமையைச் சோதிப்பது பெருங் கேடு பயக்கும் என்று அரசியலார்க்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கிறது.

முன்: இரா. செழியன்
வழி: சி. பி. சிற்றரசு
அரங்கண்ணல்

9. படாஸ்கர் தீர்ப்பு

படாஸ்கர் தீர்ப்பு மக்களுக்குத் தெளிவாக இதுவரை அறிவிக்கப்படாதிருக்கிற வருந்தத்தக்க நிலையில், ஓரளவு தெரிவிக்கப்பட்டு வரும் தகவல்களிலிருந்து தமிழ் நாட்டுக்குத் திருத்தணியும் அதை ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று அறிந்து இம்மாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அதேபோது, ஏற்கெனவே தமிழ் நாட்டுடன் பல்வேறு வகையாலும் தொடர்பு கொண்டு இணைந்து வாழ்ந்து வரும் சில பகுதிகளில் வளமிக்க இடங்களும், செல்வக் காடுகளும், நீர்ப் பாசன வசதிகளும், ஆரணியாறு தேக்கத் திட்டப் பகுதியும், படாஸ்கர் தீர்ப்புப்படி அங்கு வாழும் மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக, தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்திரத்திற்கு அளிக்கப்பட இருப்பதறிந்து இம்மாநாடு வருந்துகிறது. சென்னை அரசு

* 10-ம் பக்கம் பார்க்க

சோமநாதபுரத்துச் சிலை

பி. சி. கணேசன் பி.எஸ்ஸி., பி.டி.,

சென்ற வாரத் தொடர்ச்சி

4

காலையில் எழுந்தவுடன் கஜினிக்கு முதலில் கண்களில் பட்டது சோமநாதர் ஆலயத்தின் கோபுரம்தான்! கலையின் உருவாக வளர்ந்து மடமையின் அரவணைப்பில் இன்று ஆட்பட்டிருக்கும் இந்த ஆலயம் வருங்கால சந்ததிககு என்னென்ன உண்மைகளைச் சொல்லப் போகிறதோ என்று கஜினி தனக்குள்ளேயே கற்பனை செய்து பார்த்துக்கொண்டான். அவன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குதிரை சவாரிக்காகக் கூடாரத்தை விட்டு வந்தான்.

"மகராஜ்!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அழைத்தது வேறு யாருமல்ல; கஜினியின் ஆருயிர் நண்பனும் சரித்திரப் பேராசிரியனும் கஜினிக்கு அந்தரங்கக் காரியதரிசியுமான உட்பிதான் அழைத்தது.

"என்ன உட்பி, இவ்வளவு அதிகாலையில்....." என்றான் கஜினி.

"இரண்டு தினங்களுக்கு முன், நாம் சிறை செய்து வைத்திருந்த இந்து வீரனை விடுதலை செய்தீர்களல்லவா? அது ஒன்றும் பெரிய ராஜதந்திரமாக எனக்குப் படவில்லை......பலர் எதிரில் உங்களுக்கு எதிராகப் பேச வேண்டாமென்று பேசாமல் இருந்து விட்டேன்...நம்முடனிருந்த இந்துவை விடுதலை செய்ததால் நமக்கென்ன லாபம்?" என்றான் உட்பி.

கஜினி, உட்பியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான்.

"உட்பி, சில சமயங்களில் எதிரி நம் கைதியாக இருப்பதைவிட, அவனை விடுதலை செய்து இச்சைப்படி திரிய விடுவதில் நிறைய அனுகூலங்கள் உண்டு...புறப்படு என்னோடு......விளக்கம் தானாகக் கிடைக்கும்," என்றான் கஜினி.

அடுத்த கணமே இருவரும் குதிரைமீதேறி வெகு வேகமாகச் செல்லத் தலைப்பட்டனர். சிறிது நேரத்துக்கெல்லாம் கஜினி காடு ஒன்றில் நுழைந்தான். உட்பியும் ஒன்றும் புரியாமல் அவனைப் பின் தொடர்ந்தான். சுமார் ஒரு மைல் தூரம் சென்றிருப்பார்கள். ஒரு பாழ் மண்டபம்! காலத்தைக் கணிக்க முடியாத அளவுக்குப் பழமையானது. கஜினி குதிரையிலிருந்து கீழே குதித்தான்.

"பார்த்தாயா இந்தப் பாழ் மண்டபத்தை," என்றான் கஜினி.

உட்பி, உடனே பையிலிருந்த தோல் புத்தகத்தை எடுத்து பாழ் மண்டபத்தைப் பார்த்து சில குறிப்புகள் எழுதிக்கொண்டான்.

"சரித்திர ஆசிரியரே, பாழ் மண்டபத்தின் சரித்திரத்தை ஆராய உன்னை நான் இங்கே அழைத்து வரவில்லை. நாம் படைக்கப் போகும் சரித்திரத்திற்கு உதவியானவைகள் இங்கே இருக்கின்றன," என்றான் கஜினி.

உட்பி ஏதும் புரியாமல் 'திரு திரு' வென்று விழித்தான்.

"வா," என்று கூறி கஜினி பாழ் மண்டபத்துக்குள் நுழைந்தான். உட்பியும் ஆச்சரியம் மேலிடப் பின்னே சென்றான்.

இருளடைந்த மண்டபத்தின் மத்தியில் ஓர் அழகான லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. கஜினி மெதுவாக அந்த லிங்கத்தை நகர்த்தினான். என்ன ஆச்சரியம்! லிங்கத்தின் அடியில் குகை; படிக்கட்டுகளோடு அமைந்திருந்தது!

வாய் பிளந்தபடியே உட்பி கஜினியைப் பார்த்தான்.

"என்ன உட்பி திகைக்கிறாய்? அதிசயங்களின் ஆரம்பகட்டத்தில்தான் இருக்கிறோம். பயப்படாமல் என்னைத் தொடர்ந்து வா! எத்தனையோ பிரமிக்கத்தக்க விஷயங்களைத் தெரிந்து கொள்ளப் போகிறாய்..." என்று கூறிக்கொண்டே படிக்கட்டுகளில் இறங்கினான் கஜினி.

உட்பியும் கனவுலகத்தில் நடந்து செல்லுவதுபோல் அவனைப் பின் தொடர்ந்தான்.

கீழே பெரிய கூடம்; கூடத்தில் பல மாடங்கள்! மாடங்களில் நிறைய செப்பு ஏடுகளும் ஓலைச் சுவடிகளும்!

உட்பிக்கு அவனுடைய கண்களையே நம்ப முடியவில்லை. "இதென்ன ரகசிய நூல் நிலையமா?" என்றான்.

"இல்லை; மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மைகள்!" என்றான் கஜினி.

ஒவ்வொரு ஏடாகப் புரட்டி, முடிந்தவரை வேகமாகப் படித்தான் உட்பி. ஆச்சரியத்தால் அவன் கண்கள் அகல விரிந்தன. இடையில் படிப்பதை நிறுத்திவிட்டு, "இந்த ஏடுகளில் காணப்படுகின்ற விஷயங்கள் உண்மையாக இருக்குமா?" என்று கஜினியைப் பார்த்துக் கேட்டான்.

"பின் வேறு எப்படி இருக்க முடியும்?" என்று கேள்வியைத் திருப்பிக் கேட்டான் கஜினி.

"இவைகள் உண்மையென்று நீங்கள் நம்பக் காரணம்?"

"உண்மையானவைகளாக இல்லாவிட்டால் அவை ஒளிக்கப்பட வேண்டிய அவசியமே யில்லை," என்றான் கஜினி.

மீண்டும், படிப்பதில் உட்பி ஆர்வத்தோடு ஈடுபட்டான்.

"உட்பி, இது ஒன்றும் கஜினி நகரத்தின் நூல் நிலையமல்ல. உன் இஷ்டப்படி சாவதானமாகப் படிக்க" என்றான் கஜினி.

"ஐயையோ! இத்தனை அரிய விஷயங்களை-நமக்கு வேண்டிய ஆதாரங்களை-இங்கேயே விட்டு விட்டுச் சென்று விடுவதா...? காண்டற்கரிய கருவூலங்கள்... இவைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நாம் நம்முடைய பாசறைக்கு எடுத்துச் சென்று வைத்துக் கொள்ளுவதுதான் நல்லது," என்று அங்கலாய்த்தான் உட்பி.

"உட்பி, நீ சரித்திரப் பேராசிரியனாக இருக்கலாம். ஆனால் கட்டாயம் ராஜதந்திரியல்ல. சோமநாதபுரத்தின் வருங்காலமே இந்த அறையில்தான் அடைபட்டுக் கிடக்கிறது. இது எதிரிகளின் படை வீடு. நாம் இம்மாதிரி இங்குவந்து போவது அவர்களுக்குத் தெரியாது. இந்தக் குகையின் இரகசியம் ஒருவருக்கும் தெரியாது என்றே அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும் இங்கிருந்து மறையுமானால் மர்ம அறையின் ரகசியம் வெளிப்பட்டு விட்டதை அறிந்து அவர்கள் ஜாக்கிரதையாகி விடுவார்கள்...ஆகவே நாம் சாதுர்யமாகச் செய்யக் கூடியதெல்லாம் இந்த ஏடுகளில் காணப்படும் விஷயங்களை சோமநாதபுரத்தின் வீழ்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுவதுதான்!"

கஜினியின் உரையால் தெளிவு பெற்றான் உட்பி!

"கட்டாயம் நம்முடைய பைரூனியை அழைத்து வந்து இந்தக் குகையைக் காட்ட வேண்டும்...அவருக்குத் தேவையான..." என்று இழுத்தான் உட்பி.

வாய்விட்டுச் சிரித்தான் கஜினி. "உட்பி, உன் நண்பன் பைரூனி வானாராய்ச்சி நிபுணன் என்பது சரி. ஆனால் பைரூனியைப் போன்ற அறிவியல் மேதைகளிடம் அரசியல் ரகசியங்களை வெளியிடுவது உசிதமல்ல; இந்த விஷயம் உன்னோடும் என்னோடும் மட்டும் நிற்கட்டும்; ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான் கஜினி.

அறையை மீண்டும் ஒருமுறை சுற்றிப் பார்த்தான் உட்பி.

"சரி, பாசறைக்குப் போகலாமா?" என்றான்.

"அதற்குள்ளாகவா? என்னோடு இன்னும் வா..." என்று கஜினி அறையின் கோடிக்குச் சென்று, மேலே செல்லும் புதிய படிக்கட்டுகளின் வழியாக ஏறினான்.

"இந்தப் படிக்கட்டுகள் எங்கே போகின்றன?"

"சோமநாதபுரத்திற்கு!"

8-ம் பக்கம் பார்க்க

அகமும் புறமும் இணைந்தாற்போல்
நகராண்மைக் கழகத்தில் இருந்தாரே
நம் குலவிளக்கனையார்—அண்ணா, நெடுஞ்செழியன்!



உயரப் பறக்குது பார் நமது கொடி!
வடப
அயரப் பறக்குது பார் தமிழர் கொடி!

கலையமுது படைத்து—சமுதாயத்து
நிலையதனை விளக்குகின்றார் எம். ஜி. ஆர்!
('இன்பக் கனவு' நாடகத்தில்)



தீப ஒளி காட்டுகின்ற திருத்தலத்தில்
தீரர் ஒலி முழக்குகின்ற காட்சி என்னே!

அண்ணாமலையில் இலட்சிய தீபம்!
தூங்கும் புலியே, தூக்கம் கலைவாய்!

"அலைகடலே! எரிமலையே! பெருந்தமிழே!
நிலைகுலையா மறவரேறே!
வந்திடுவீர் இந்திதனை அழித்திடவே!"
என முழங்கும் அருணகிரியார்.

எடுத்ததை முடித்திடும் தலைவர்க்கும்—திறப்பாளர்க்கும்"
கொடுத்திடத் துடிப்பதென்னவோ தொடுத்திடா முல்லை
எங்கள் சத்தி!

சத்தி —ப. உ. சண்முகம்!



சத்தி சந்தானம் சண்முகமும்
சாமி அருணகிரி அண்ணாமலை கிருட்டினமூர்த்தி
தருமுவுடன் செயல்வீரர் நடராசன்
பவனிக்கு எழுந்துவிட்ட பாங்கு காணீர்!



மதுரை முத்தெடுத்து மகிழுகின்றார்
நமது சிற்றரசர் மாநாட்டில்!



இரு துருவங்கள்

ஆசிரியர்: ஏ. எஸ். வேணு பி. ஏ.

பதினாறு காட்சிகளில் முடிவடையும்வண்ணம் ஒரு சின்னஞ் சிறிய சீர்திருத்த நாடகத்தைத் தோழர் ஏ. எஸ். வேணு சுவை படத் தீட்டியுள்ளார். விதவையாகி, வீணனொருவனுக்குத் தன் கற்பை அர்ப்பணித்துப், பின் அவனால் கைவிடப்பட்ட நிலையில் ஒரு பெண் மூன்றாம் முறையாக ஒரு டாக்டரை மணந்துகொள்கிறாள். அவரோ, கள்ளக் காதல் புரிந்த தன்னுடைய முதல் மனைவியை அவள் விரும்பியவனோடு அனுப்பிவிட்டு, வேலைக்காரிக்கு மனைவியெனும் அந்தஸ்தை அளித்து உயர்த்துகிறார். அவள் அவசரப்பட்டுத் தற்கொலை செய்துகொண்டதால் மூன்றாம் முறை மணமகனாகிறார். கதையும் சுபமாக முடிகிறது.

[விலை முக்கால் ரூபாய்]

கிடைக்குமிடம்:

செந்தமிழ்ப் பண்ணை, சென்னை-7.

கட்டபொம்மன் தமிழனா?

ஆசிரியர்: வ. வேணுகோபாலன்

இந்த ஆசிரியர் கட்டபொம்மனுடைய வீரத்தைப் பாராட்டுவாராம்; மதிப்பாராம்; ஆனால் அவன் தமிழன் என்பதை ஒத்துக்கொள்ளமாட்டாராம். காரணம், அவன் ஆந்திரனாம். ஆந்திரர் தமிழருக்குப் பரம்பரை வைரிகளாம். கன்னடியர், மலையாளிகள் பரவாயில்லையாம். தமிழகத்திலுள்ள தெலுங்குப் பேசும் மக்களைக்கூட ஆந்திரர்களென்று கருதி ஆத்திரத்தைக் கக்குகிறார். பன்னிரண்டே பக்கங்களில் அற்புதமான ஒரு ஆராய்ச்சி (?) நூலை எழுதியுள்ளார்.

[விலை இரண்டணா]

கிடைக்குமிடம்:

காந்தி பூங்கா மேல்புறம், கும்பகோணம்.

கவிதைக் கலை

ஆசிரியர். நா. பார்த்தசாரதி

கவிதை எழுத விரும்புவோர்க்கு ஓரளவு வழி காட்டும் வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. கவிதையென்று எண்ணிக்கொண்டு வரிக்கு நான்கு வார்த்தைகளாய் மடக்கி மடக்கி எதையாவது எழுதிவிட்டுத் திருப்தியடையும் பலருக்கு இதுபோன்ற நூல்கள் தேவைதான்.

கவிதையை நன்கு ரசிக்கத் தெரிந்த பின்னர்தான் ஒருவன் கவிஞனாக முடியும் என்பதையும், கவிதைக்கும் வசனத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதையும் நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆனால் உள்ளதை உள்ளபடி கூறாமல் மிகைப்படுத்தி, இயற்கைக்குப் பொருந்தாவண்ணம் கூறுவதில்தான் இன்பம் மிகுதி என்ற ஆசிரியர் கூற்று விவாதத்திற்கு இடமளிப்பதாகும்.

[விலை 75 புதுக்காசு]

கிடைக்குமிடம்:

வரகுகி பதிப்பகம், மதுரை.

சேரிப் பெண்

ஆசிரியர்: மு சு. அருள்சாமி எம். ஏ.

ஓவியர் கே. மாதவனின் எழில்மிக்க முகப்பைப்போல உள்ளேயும் இந்நாடக நூல் நல்ல தீந்தமிழ் நடையும், தேன் போன்ற கருத்துக்களும் கொண்டு சிறப்பாக அமைந்திருக்கிறது. சாதி வெறியர்களின் சதிக் குணமும் இன்ன பிற சமுதாயச் சிக்கல்களும் மிகுந்த துணிவோடு தீட்டப்பெற்றுள்ளன; அதுவும் ஒரு தமிழ் விரிவுரையாளரால்! படிக்க இனிக்கிறது. சில சிறு மாறுதல்களைச் செய்து நீளத்தையும் கொஞ்சம் குறைத்துவிட்டால் நடிக்கவும் ஏற்றதாகும். வளர்க ஆசிரியரின் ஆர்வம்; வெல்க அவர் முயற்சியெனப் பாராட்டுகின்றோம்.

[விலை ரூ. 2-20]

கிடைக்குமிடம்:

இலயோலாக் கல்லூரி, சென்னை-31.

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

"என்ன...?"

"பேசாமல் என்னோடு வா!"

"அது கிடக்கட்டும்; நீங்கள் எப்படி இந்த வழியைக் கண்டு பிடித்தீர்கள்?"

"இந்தக் கைதியை ஏன் விடுதலை செய்தேன் என்று கேட்டாயல்லவா? அதற்குள் அந்த விஷயத்தை மறந்து விட்டாயே!"

"மறக்கவில்லை. இந்தக் கைதியை விடுதலை செய்ததற்கும் இந்த ரகசிய வழிக்கும் என்ன சம்பந்தம்?"

"கைதியை விடுதலை செய்தேனே தவிர, விடுதலையான பின் அவனுடைய நடவடிக்கைகளை நானே கவனித்தேன். போர் வீரனாக இருந்தவன் இந்தப் பாழ் மண்டபம் வந்து சாதுவாக காவி உடையணிந்து கொண்டான்! கமண்டலமும் உருத்திராட்சமும் அவனுடைய போர்க் கருவிகளாக மாறின. இந்தப் பாழ் மண்டபத்தின் லிங்கத்தின்முன் ஜபம் செய்ய ஆரம்பித்தான். ஓர் இரவு—சாது லிங்கத்தைப் பெயர்ப்பதைக் கண்டு பிரமித்துப் போனேன். ஆஸ்திகன் நாஸ்திகனாகிவிட்டானோ என்றுகூட அதிசயப்பட்டேன். ஆனால், அவன் லிங்கத்தின்கீழ் இறங்கியவுடன் லிங்கம் பழைய ஸ்தானத்தை அடைந்தது. வெகு நேரமாகியும் அவன் திரும்பி வராததால் நானே லிங்கத்தை நகர்த்திப் பார்த்தேன்...புதிய பல உண்மைகளைக் கண்டேன்..."

"அந்தப் போர்வீரன் — நீங்கள் பின் தொடர்ந்த சாது— என்னவானான்?"—உட்பி ஆச்சரியத்தோடு கேட்டான்.

கஜினி பதில் சொல்லவில்லை. படிக்கட்டுகளும் முடிந்துவிட்டன. சுவரின் கைப்பிடியைப் பலமாகத் தள்ளினான். திடீரென்று கதவு திறந்து சூரிய வெளிச்சம் உள்ளே நுழைந்தது. கஜினி கதவின் வழியாக நுழைந்தான்.

"அதோ, சோமநாதர் ஆலயம் தெரிகிறதே!" என்றான் உட்பி.

—கதையைச் சொல்லிக் கொண்டே கஜினி படிகளில் ஏறிக் கொண்டிருந்தான்.

"ஆம் உட்பி! இப்பொழுது நாம் சோமநாதபுரத்துக் கோட்டைக்குள்ளேயே வந்துவிட்டோம்!"

"இனி முற்றுகையே தேவையில்லை" என்றான் உட்பி மகிழ்ச்சியோடு.

"அதுதான் முடியாது. பாழ் மண்டபத்திலிருக்கும் லிங்கத்திற்கு சோமநாதர் ஆலயத்து அர்ச்சகர்கள் வந்து பூஜை செய்கிறார்கள்... ஆகவே இந்த சுரங்க வழியை நாம் பயன்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல!"

உட்பி சிந்தனையில் மூழ்கினான்.

"அந்தச் சாது விஷயம்...?"—சாது என்ன ஆனான் என்பதை அறிய உட்பி ஆவலாக இருந்தான்.

கஜினி, மரக் கிளையை சுட்டிக் காட்டினான். அங்கே காவி உடைகள் தொங்கிக் கொண்டிருந்தன. உட்பிக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன விழிக்கிறாய் உட்பி? சாதுவின் உடல் சுறாவுக்கும் திமிங்கலத்திற்கும் தீனியாகி விட்டது!"

உட்பி, கஜினியைக் கூர்ந்து நோக்கினான்.

"சாதுவைப் பின் தொடர்ந்த நான், இரகசிய வழியின் முடிவைக் கண்டவுடன் சோமநாதபுரத்து மண்ணுக்கு சாதுவைப் பலியாக்கிவிட்டேன்!"

"சோமநாதருக்கு உயிர்க் காணிக்கை அளித்து விட்டீர்கள்..." என்றான் உட்பி.

"போக்க வேண்டிய உயிரைப் போக்கி, காக்க வேண்டிய உயிரைக் காக்க கஜினி தவறியதே இல்லை!" என்றான் கஜினி.

சோமநாதபுரத்தில் மண்டிக் கிடக்கும் இயற்கை அழகில் மனத்தைப் பறிகொடுத்து நின்றான் உட்பி.

ஆனால் கஜினியோ...! அவன் பார்க்குமிடமெல்லாம் அந்தப் பைந்தொடியின் கண்ணொளி வீசிப் பரவசப்படுத்தியது. சாதுவைக் கொன்ற பிறகுதான், அந்த இந்துப் பெண்ணின் குழந்தையைக் காப்பாற்றினான். எங்கு நோக்கினும் எங்கும் இரு விழிகள் அவன் முன்தோன்றி அவனைச் சித்ரவதை செய்தன. அவள் நின்ற பூமியில் ஒரு புனிதத் தன்மை தோன்றி விட்டது போன்ற உணர்ச்சி கஜினிக்குத் தோன்றியது. அப்படியே மெய் மறந்து நின்றான்.

"போகலாமா?" என்று உட்பி கேட்ட பிறகுதான் சுய நினைவு பெற்றான் கஜினி.

குகையைத்தாண்டி பாசறை வரும் வரையில் கஜினி உட்பியிடம் எதுவுமே பேசவில்லை.

(தொடரும்)

கே. வி. கே. சாமி நினைவு நாள்

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரரும், செயற் குழு உறுப்பினரும், நெல்லை மாவட்டச் செயலாளரும், தொழிலாளர்த் தலைவருமாகிய தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே, நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள் அவரது நினைவு நாளாக 29—9—57 ஞாயிறு அன்று கொண்டாடுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
போதச் செயலாளர், தி. மு. க.

கட்டபொம்மன் விமர்சனம்:

வெற்றி வேல்! வீர வேல்!!

"வீரவேல்! வெற்றிவேல்!" எனப் படைக்கலனுக்குப்பெருமை கூறி, திண்டோள் மறவர்களின் தினவெடுக்கும் கரங்களுக்கு வேலை தரும் தமிழகத்து வரலாற்றை எந்தப் பக்கம் புரட்டினாலும் உணர்ச்சி ஊற்றெடுக்கத்தான் செய்கிறது. ஒளியுமிழும் கண்களும் உயர்ந்த நோக்கும் விரிந்த மனமும் வீர நடையும் கொண்டு திருவிடத்து மண்ணிலே உலவிய மறவர் பெருமக்களை நினைத்தாலே புதிய எழுச்சி பிறக்கிறது. போர் முரசமர்கிறது இதயம். மூச்சிலே சூடு கிளம்புகிறது. நடையிலே வேகம் புகுந்து கொள்கிறது. கோழையும் வீரனாகிறான்; தமிழகத்துப் புறநானூறு கேட்டால்!

உரிமைக் கனல்-தன்மான முழக்கம்- தாள் பணியாத் தன்மை—விடுதலை கீதம்—போர்ப்பரணி-இப்படி எப்பக்கம் திருப்பினும் வீர மகளின் நாட்டியமே நடைபெறும் நீமது. சரித்திரப் பெருநூலில் கட்டபொம்மன் ஒரு பக்கம்!

தமிழகத்து சரித்திரத்தில் முழுமை கிடையாது. எத்தனையோ இருட்டடிப்புகள்; எவ்வளவோ குழப்பங்கள்! இவை அத்தனையும் மீறி முகில் கிழித்த மதி போல ஒரு சில வரலாறுகள் நம்மை வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

அவைகளில் ஒன்றே வீரபாண்டியக் கட்டபொம்மன். வெள்ளையனை எதிர்த்து முதல் முழக்கம் செய்த வீரன். மொழியால் தெலுங்கனும், இனத்தால் திராவிடனுமாவான். தமிழகத்தில் பல தலைமுறைகளுக்கு முன்பே குடியேறி விட்டதால் தமிழனுமாவான். அவனது நினைவாக மண்டபங்கள் உண்டு. இடிந்த கோட்டைகள் உண்டு. பாழடைந்த பாஞ்சாலங்குறிச்சி உண்டு. பநுவல்கள் பல உண்டு. பாடல்கள் உண்டு. ஆடல்களும் உண்டு.

'கட்டபொம்மனை' நாடகக் காவியமாகச் செய்ய வேண்டுமென்றும், வீரனுக்குரிய இலக்கணங்கள் அவனிடம் எப்படி நிரம்பியிருந்தன என்பதை மக்களுக்குக் காட்டிட வேண்டுமென்றும் அழியாத ஆசை பெற்ற தமிழர் சக்தி கிருஷ்ணசாமி அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே, இன்று தமிழ் நாடெங்கும் விடுதலை முழக்கமிடும் 'கட்டபொம்மன்' நாடகமாகும்.

சிவாஜி நாடக மன்றத்தார் அரங்கேற்றியுள்ள இந்த நாடகத்தைப் பல்லாயிரம் மக்கள் பார்த்துக் களித்தனர். இன்னும் பல்லாயிரவர் காணத் துடித்து நிற்கின்றனர்.

"சிவாஜி கணேசன் கட்டபொம்மனாக நடிக்கிறார்" என்று விளம்பரங்களில் கண்டபோது நாம் வியப்படைந்தோம். இஃதென்ன விந்தையான விளம்பரம் எனக் கேலி கூடச் செய்தோம். ஏன் தெரியுமா? சிவாஜி கணேசன் நடிக்காமல் வேறு யார் கட்டபொம்மனாக நடிப்பது என்று எண்ணித்தான்! கட்டபொம்மன் பாத்திரத்தைத் தாங்கி அவர் கர்ச்சனை புரிவதையும், கண்களிலேயிருந்து கனற் பிழம்பு வெளிப்படுவதையும், விடுதலை முழக்கமிட்டுப் "போர்! போர்!" எனப் பாய்ந்திடும் பாங்கையும், வேங்கையோ அன்றி வெறிகொண்ட யானையோ என அவர் நடந்து காட்டுவதையும், வெந்தழல் நோக்கு மட்டுமல்ல; இதோ வெண்ணிலவுப் பார்வையும் காட்டுகிறேன் என்பது போலக் கனிவும் குழைவும் கலந்து நடிப்பதையும், நம்மால் எல்லாம் வர்ணிக்க முடியாது. பாராட்ட இயலாது. இதோ; அறிஞர் அண்ணா அவர்களின் வாயிலாகவே வெளிப்பட்ட சிறப்புரையைத் தருகிறோம்:

"உலகப் புகழ் பெற்ற நடிகன் "மார்லன் பிராண்டோ" கூட கணேசனைப் போல நடிப்பதென்றால் கஷ்டம் தான்! ஒரு வேளை முயற்சித்தால் மார்லன் பிராண்டோ கணேசனைப் போல நடிக்கக் கூடும்."

★

"ரஷ்யாவிலே கலை நிகழ்ச்சி யொன்றில் இந்திய உபகண்டத்தின் பெருமை சொல்ல 'சாகுந்தலம்' எனும் நாடகத்தை நடித்துக் காட்டினார்களாம்; இந்தியக் கலைஞர்கள்.

கணேசனின் கட்டபொம்மன் நாடகமல்லவா நடைபெற்றிருக்க வேண்டும்! வசனம்கூடத் தேவையில்லை. தன்னைக் காட்டிக் கொடுத்த கயவர்களை நோக்கி இருமுறை காரி உமிழ்கிறாரே, அதை மட்டும் நடித்துக் காட்டினாலே போதும்— ரஷ்யர்கள் அயர்ந்து விடுவர்; அவ்வளவு அபாரமான நடிப்பு அது! ஆவேசமான கட்டம்!

★

"வீணையின் எந்த நரம்பைத் தடவினால் என்ன ஒலி எழும் என்பதை அறிந்து இனிய நாதத்தை அநாயாசமாக எழுப்பும் சங்கீத வித்துவானைப்போல பாத்திரத்தின் தன்மையறிந்து உயிரூட்டமளித்து நடிக்கக் கூடியவர் கணேசன்."

★

"இந்த நாடகமன்றமெனும் வைர மாலையில் ஜோதி நிறைந்த கோமேதகப் பதக்கமாகத் தோன்றுகிறார் கணேசன்."

★

கட்டபொம்மன் நாடகத்திற்குத் தலைமை தாங்கிய அண்ணா அவர்களின் சொற்பொழிவில் சிதறிய முத்துக்களே மேலே தீட்டப் பட்டவை.

சரித்திரத்திலே கட்டபொம்மன் ஜக்கம்மா பக்தன். முருகனிடம் பக்தி கொண்டவன். அந்த உண்மையை மறைக்காமல் சக்தி—கிருஷ்ணசாமி நாடகத்தை உருவாக்கியிருக்கிறார். எனினும், நாடகம் பார்க்கிறவர்களுக்கு கட்டபொம்மனை அவன் வணங்கிய கடவுள்களும் காப்பாற்றவில்லையென்ற எண்ணமே எழுகிறது!

அதைத்தான் அண்ணா அவர்கள் "இந்த நாடகம் பூஜை மடத்திலே, ஆரம்பமாகித் தூக்கு மேடையிலே முடிகிறது—இது பலருக்குப் பாடமாயிருக்கும்" என்று மிக அழகாகச் சுட்டிக் காட்டினார், தலைமை வகித்த போது!

தமிழ், இந்த நாடகத்தில் பல இடங்களில் எழிலாட்டம் போடு

❋ 10-ம் பக்கம் பார்க்க



20—9—57 அன்று சென்னை அண்ணாமலை மன்றத்தில் திரு ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் ஏ. எல். எஸ். புரடக்சன்ஸ் சார்பாக திரு. சிவாஜி கணேசனுக்கும், ஆசிரியர் சக்தி கிருஷ்ணசாமிக்கும் பொன்னாடை போர்த்தினார்கள்.

அப்போது நாடகம் பார்க்கச் சென்றிருந்த ஆசிரியர் மு. க. வை திரு. கணேசன் "இப்போது என் அருமை நண்பர் மூனாகானா நாடகத்தைப்பற்றி சில வார்த்தைகள் பேசுவார்" என்று அறிவித்து விட்டார்.

அந்த நேரம் மு. க. நாடகத்தைப் பாராட்டிவிட்டுப் பேசியதாவது:

"நான் நாடகம் காண வந்தேனே தவிர கருத்துரை வழங்க வரவில்லை. திடீரென்று நண்பர் கணேசன் என்னை மேடைக்கழைத்து பேசச் சொல்லி விட்டார். நீங்களெல்லாம் ஆச்சரியப்படும்படியாக மேடையில் பேசும்போது முதன் முறையாக என் உடலும் குரலும் நடுங்குவதை என்னால் மறைக்க முடியவில்லை. இந்த நடுக்கத்திற்குக் காரணம் எனக்கும் நண்பர் கணேசனுக்கும் மட்டும்தான் தெரியும்.

"எனக்கு முன் பேசிய திரு. சின்ன அண்ணாமலை குறிப்பிட்டார், கட்டபொம்மன் காலத்து வீரம் இன்று கருகிவிட்டதற்குக் காரணம் ஆங்கிலேயர் நுழைவுதான் என்று! ஆனால் கட்டபொம்மன் உயிர் வாழ்ந்த காலத்திலேயே அவனைக் காட்டிக் கொடுத்த கோழைகளும் வாழ்ந்திருக்கிறார்கள். அதனால் ஆங்கிலேயர் நுழைவதற்கு முன்பே வேறொரு கொள்கை தமிழ் நாட்டில் வந்து புகுந்திருக்கிறது—எனத் தெரிகிறது.

"புலியை முறமெடுத்து அடித்தவர்கள் பூனை குறுக்கிட்டால் அஞ்சியதற்குக் காரணம் தோழர் குறிப்பிட்டதுபோல ஆங்கிலேயர் வருகையல்ல; அவர்களுக்கு முன்பே இங்கு நுழைந்த கொள்கைதான்!

"ஊமைத்துரை கட்டபொம்மனைப் பார்த்து அண்ணா! அண்ணா!! என்றழைக்கும்போது விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள நான் எங்கேயோ இழுத்துச் செல்லப் படுகிறேன். ஆகையால் கட்டபொம்மன் நாடகம் இன்று விடுதலைப்போரில் ஈடுபட்டவர்களுக்கும் புதிய உணர்ச்சி ஊட்டும் வகையில அமைந்திருக்கிறது."

வெற்றி வேல்! வீரவேல்! ...

❋ 9-ம் பக்கத் தொடர்ச்சி

கிறது! பல இடங்களில் ஊழிக் கூத்தும் ஆடுகிறது! அவ்வளவு இனிமை! அவ்வளவு ஆவேசம்! சக்தியின் எழுத்து, சக்தியுள்ள எழுத்தேதான்!

காட்சி அமைப்புக்களோ கண்ணுக்கு விருந்து!

இசை காதுக்கு விருந்து!

மற்ற நடிகர்கள்; யார் யாரைத் தனித்தனியே சொல்வது; அனைவருமே பண்பட்டவர்கள்!

வண்ணத் திரைகளால் நம்மை வரலாற்றுக் காலத்திற்கே அழைத்துச் செல்கிறார் ஓவியர் தருமராஜ்!

உடை, அணி, மணிகளிலே இராமகிருஷ்ணன் பாராட்டைப் பெற்றுவிடுகிறார்!

நாடகத்திற்குப் போதுமான நகைச் சுவையில்லாததும், இருப்பதும் சற்று விரசமாகத் தோன்றுவதும் பெருங் குறை.

சிறைச்சாலையில் ஊமைத்துரையின் துணைவியிடம் தமிழ்ப் புலவர் கட்டபொம்மன் கதை எழுதத் துவங்கி அதன் பிறகு முன் கதையை ஆரம்பிப்பது நாடக எடுப்புக்கு அவ்வளவு விறுவிறுப்பைத் தரவில்லை. முதற் காட்சியாகவே கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் காட்டி, குரல் வாயிலாக முன்னுரை கூறி, பிறகு சம்பவங்களை அடுக்கியிருந்தால் ஒரு வீர காவியத்திற்கேற்ற ஆரம்பம் கிடைத்திருக்கும்.

துரோகிகள் இருவரை வள்ளியென்பாள் மாளிகைக்குள் அழைத்து வந்து புத்தி கற்பிக்கும் காட்சியில் கட்டபொம்மன் இல்லாமல் மற்றவர்கள் இருக்கலாம்.

புதுக்கோட்டையில் கட்டபொம்மன் காட்டிக் கொடுக்கப்படும் கட்டம் நாடகத்திற்கே பெரிய திருப்பம்! அதை மிகவும் சுருக்கமாக ஆக்கி விட்டது பெருங்குறை!

இப்படிச் சிறு சிறு குறைகள் இருப்பினும், அனைத்தையும் கணேசனின் நடிப்பு ஈடு செய்து விடுகிறது.

அமைச்சர் தானாபதிப் பிள்ளை தவறு செய்துவிட்டார் என்று கண்டிப்பதும். அதே சமயம் அவரை எதிரியிடம் ஒப்படைக்க முடியாது என்று போர் முழக்கம் செய்வதும் மனதை விட்டகல முடியாத நடிப்பு!

'கட்டபொம்மன்' சிவாஜி கணேசனுக்கு ஒரு திருப்பு முனை! தமிழ் கலையுலகிற்கே திருப்பு முனைதான்!

"தம்பி! கணேசா! நீ வளரு! நன்றாக வளரு! நீ நன்றாக வளர்ந்திருக்கிறாய்! இன்னும் வளருவாய்! வளரு! எங்கிருந்தாலும் வளரு! எப்படியிருந்தாலும் வளரு'—என வாழ்த்துகிறேன்."

என்று அண்ணா தலைமையுரையாற்றியபோது கணேசன் கண்கள் குளமாகிவிட்டன.

"கணேசன், நாடகத் துறையில் மலர்ந்த மலராக இருக்கும் போதுதான் நாட்டவர் காண்கின்றனர். அரும்பாக இருந்த காலத்திலேயே நான் அறிவேன்."

—அண்ணா இதைச் சொல்லும் போது நாடகமன்றமே கையொலியால் அதிர்ந்தது. கணேசன் உள்ளத்திலேயும் அதிர்ச்சி! அது வார்த்தைகளாக வெளிப்பட்டது:

"சாதாரண கணேசனாக இருந்த என்னை சிவாஜி கணேசனாக மாற்றியது அண்ணா அவர்கள் தான் என்பதை இப்போதல்ல; அமெரிக்க வானொலியில் பேசும்போதுகூட குறிப்பிட்டிருக்கிறேன். என்னை வளர்த்து விட்டவர் அண்ணாதான். அவருக்கு நானும் என் குடும்பத்தாரும் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்."

—அதற்குமேல் சொற்கள் வரவில்லை! கண்ணீர்தான் வெளிப்பட்டது.

இப்போது சொல்லுங்கள்; கட்டபொம்மன், கணேசனுக்கு ஒரு திருப்பு முனையா அல்லவா என்று!

"நாமெல்லாம் ஒரு குடும்பம்" என்ற உறவும், பாசமும், உரிமையும், பந்தமும் யாருடைய குறுக்கீட்டால் சிதைந்து போயினும், தங்கத் தாம்பாளத்தில் விழுந்த கிறலைப்போல மறுபடியும் உருக்கி ஒன்றாக்கிக் கொள்ளும் தன்மையிலேதான் நமது குடும்பம் நடைபெற்று வருகிறது.

அந்த உண்மையின் படப்பிடிப்புதான் கணேசன் கண்களில் ஏற்பட்ட கலக்கம்!

கட்டபொம்மன் நாடகத்தைப் பற்றிய விமர்சனமல்லாது—கட்டபொம்மன் நாடகத்தில் ஒரு நாள் நிகழ்ச்சியைப் பற்றிய விமர்சனமாகவே அமைந்து விட்டது கட்டுரை.

ஆயினும் தேவையான விமர்சனமென்றே கருதுகிறோம்.

தென்னகம் விடுதலைப் பெறத் துடிக்கும் நேரத்தில் தென்னகத்து விடுதலை வீரனின் வரலாறு சுதந்திர வீரர்களுக்கு ஒரு கேடயம் போல உதவும் என நம்புகிறோம்.

"வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கட்டபொம்மன் நாடகத்திற்கு வடவர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அறிஞர் அண்ணா தலைமை தாங்குவது மிகப் பொருத்தம்" என்று வரவேற்றார் "பாரத் பைன் ஆர்ட்ஸ்" செயலாளர் தோழர் கல்யாணசுந்தரம். பாருங்கள்; நாடு எவ்வளவு விடுதலை தாகம் கொண்டிருக்கிறது என்று!

"பாரத் பைன் ஆர்ட்ஸ்" செயலாளர் கூறுகிறார் அவ்விதம்! "பாரத்"—ஞாபகமிருக்கட்டும்; அந்த வார்த்தை!

நமது முழக்கம் எங்கெங்கும் கேட்கிறது. அங்கிங்கெனாதபடி கேட்கிறது. வீரவேல்! வெற்றிவேல்! அதைக் கரம் பற்றிக் களம் புகுந்த 'கட்டபொம்மன்' வாழ்க! கட்டபொம்மனைத்தரும் கணேசன் வாழ்க! வளர்க!

மாவட்டத் தொடர்பு மாற்றம்

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் இதுவரை இயங்கிவந்த கீழ்க்கண்ட 6 கிளைக் கழகங்கள், சென்னை, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகங்களின் நிர்வாகிகள் உடன்பாட்டோடும் சம்மந்தப்பட்ட கிளைக் கழகங்களுக்கு முன்னரே அறிவித்துள்ளபடியும், இனி 17—9—57-ம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்புக்கு மாற்றப்படுகின்றன. இன்று முதற் கொண்டு கீழ்கண்ட ஆறு கிளைகளும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு கழகத்திற்கு உட்பட்ட கிளைகளாகப் பணியாற்றும்.

மாற்றப்படும் கிளைகள் :—

1. திருவொற்றியூர் தி. மு. க. கிளை
2. புழல் ,,
3. மாதவரம் ,,
4. கொடுங்கையூர் ,,
5. செங்குன்றம் ,,
6. ஆலந்தூர் ,,

—தலைமைக் கழகம், தி. மு. க.

❋ 4-ம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து தமிழ் நாட்டுக்கு உரிமையுள்ள இடங்களை இழந்துவருவது கண்டு வருந்துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறி வரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ் நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத் தக்க வகையிலும், மக்களின் கருத்தை அறிந்த அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: க. அன்பழகன்
வழி: வி. பி. இராமன்
டி. கே. பொன்னுவேலு

10. நங்கவரம் அறப்போர்

திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், நங்கவரம் பகுதியில், அரசாங்கச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக பெரிய நிலப் பிரபுக்கள் இழைக்கவிருந்த கொடுமைகளை எதிர்த்து, உறுதியும் அமைதியும் குலையாத வகையில் அறப்போர் நடத்தி வெற்றி கண்ட உழவர் பெருங்குடி மக்களைப் பாராட்டுவதுடன், அந்த வட்ட உழவர் முன்னேற்றச் சங்கம் நடத்திய அறப்போரில் ஈடுபட்டவர்களில் 200 உழவர்கள் மீது 70-க்கு மேற்பட்ட வழக்குகளைப் போட்டிருப்பதில், குறிப்பிட்ட பிரச்சினையில் நிலச்சுவான்தாரர்களுக்கும் உழவர்களுக்கும் கடந்த 9-9-57-ந் தேதி உடன்பாடு ஏற்பட்டு விட்டபடியால், அந்த வழக்குகளையெல்லாம் நிபந்தனையின்றி உடனடியாக அரசாங்கம் வாபஸ்பெற வேண்டுமாறு இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்வதுடன், சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாகத் திருத்தி உழவர் பெருங்குடிமக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

முன் : குளித்தலை— முத்துகிருட்டிணன்
வழி : திருச்சி—காமாட்சி

11. பீடித் தொழிலாளர்

தமிழ்நாடு முழுதும் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குப் பாக்டரி சட்டப்படி உள்ள சலுகைகள் இன்றைய தினம் கிடைக்கவில்லை; ஆகவே, மேற்படி சலுகைகளைப் பெற பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

முன்: எம். எஸ். மணி
வழி: சிற்றுளி-சுப்பிரமணியம்
வேலூர்-தோழியர் தேசியமணி

12. சர்க்கரை ஆலை

சாத்தனூர் நீர்த் தேக்கம் வேலை முடிவடைந்து விட்டதாலும், பத்து இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் காலி செய்யப்பட்டிருப்பதாலும், கூட்டுறவு முறையில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்கு அகற்றவும் மாநில அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

பாலாற்று நீர்

(அ) மைசூர் மாநில அரசியலாருடன் உடனடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, பாலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து, வட ஆற்காடு மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த முனையுமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன் ; திருப்பத்தூர்— நெடுஞ்சோழன்
வழி : எஸ். முருகையன்

13. ஓராசிரியர் நிலைமை

பல்வேறு மாவட்டங்களில், ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் ஈராண்டுக் காலம் பயிற்சி பெற்றாக வேண்டும் என்பதற்காக — வேலையற்ற நிலைமைக்கும், வாழ்க்கை நெருக்கடிக்கும் ஆளாக்கப்பட்டிருப்பது காண வருந்துவதுடன், அவர்களது பரிதாபகரமான நிலைமை சென்னை சட்டமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டும் அரசியலார் அவர்கள் குறையைத் தீர்க்காததை இம்மாநாடு கண்டிக்கிறது.

முன் : பொற்செல்வி-இளமுருகு
வழி : வி. என். இராமசாமி

14. பட்டுத் தொழிற்சாலை

குடியேற்றத்தில் மூடிக்கிடக்கும் தென்னிந்திய பட்டுத் தொழிற்சாலையை உடனடியாகத் திறந்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் எஞ்சியுள்ள வாழ்வையாவது நிலைபெறச் செய்ய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன் : சம்பந்தம்
வழி ; சாரங்கபாணி

15. நாடகக் குழு நிறுவுதல்

திராவிட முன்னேற்றக் கழக இலட்சியக் கொள்கைகளை சிற்றூர்ப் பகுதிகளில் பரப்புவதற்கு ஏற்ற வகையில் பயன்படும்படியான நாடகக் குழு ஒன்றை நிறுவித் தரவேண்டுமென்று பொதுச் செயலாளரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: பொன்—சொக்கலிங்கம்
வழி: வாணிதாசன்

முகவரி மாற்றம்

கோ. செங்குட்டுவன்,
3—ஏ, புதுத்தெரு
தூயப்பேட்டை
சென்னை—12

சென்ற வாரத் தொடர்ச்சி

'ஹார்லிக்ஸ்' சாப்பிட்டு விட்டுப் போகலாம்' என்று தேவன் அழைத்ததைக் கண்ணனால் நம்பவே முடியவில்லை. ஆனாலும் கண்ணனால் ஏனோ ஆச்சரியப்படாமலும், அதைத் தொடர்ந்து ஆனந்தப்படாமலும் இருக்க முடியவில்லை.

இருக்காதா? செங்குன்றம் என். சி. சி. 'காம்ப்'க்குச் சென்ற பிறகு அன்றுவரை அவன் மனம் ஒரு நிலையில் இருந்தது கிடையாதே! உயிருக்குயிரான நண்பன்—பள்ளியிலிருந்து விளையாட்டு மைதானம் வரை உடனிருக்கும் உத்தமத் தோழன்—அந்தத் தேவன், அவன் ஏனோ பரம்பரைப் பகையாளி போல் மாறி விட்டானே—என்ற ஏக்கம் கண்ணனின் நெஞ்சகத்து அமைதியை அன்று வரையில் கொன்றே விட்டிருந்ததே! ஆனால் அந்தத் தேவன், பந்தயம் நடக்க இருக்கின்ற கடைசி நேரத்திலேயாவது ஓட்டப்பந்தயம் உருவாக்கி விட்டிருந்த குழப்பத்தை ஓட ஓட விரட்டிவிட்டு, 'வருக நண்பனே! வருக!' என்று ஆசையுடன் நேசக்கரம் நீட்டி அழைக்கும்போது அவன் மகிழ்ச்சியின் சிகரத்திற்கே சென்றுவிட்டதில் வியப்பென்ன இருக்க முடியும்?

"ஏன் தேவா, இத்தனை நாள் மகாபலிபுரம் கற்சிலைகள் மாதிரி 'உம்'மென்று இருந்தாய்? நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்; ஏன் இப்படி உன் இருதயம் இரும்பாகி விட்டது; என்று எத்தனை ஆயிரம் கேள்விகள் என்னையே கேட்டுக்கொண்டு, வெறும் விழி நீரையே பதிலாகப் பெற்றிருப்பேன் தெரியுமா?"

களிப்பு மிகுதியால் கண்ணனின் தொண்டை தழுதழுத்தது.

"அப்படிச் சொல்லாதே கண்ணா! என் இருதயம் இரும்புதான். ஆனால், உன் ஈர நெஞ்சம் அதை வெற்றி கொண்டுவிட்டது, கண்ணா!"—தேவன் தன் தவறை உணர்ந்துவிட்டவன் போலவே பேசினான்.

கண்ணன் கண்களில் ததும்பிய ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தபடியே, "இப்போதுதான் என் மனம் நிம்மதி அடைந்தது, தேவா! இதுவரை சோர்வுற்றிருந்தேன்; உன்னால். பந்தயத்தில்கூட கலந்துகொள்ளவேண்டாமென்று முடிவு செய்திருந்தேன். ஆனால் இப்போது புது உற்சாகமே பெற்றுவிட்டேன்; அதுவும் உன்னால்! இனி நிச்சயம் பந்தயத்தில் வெற்றியேதான்!......"

கண்ணன் இதைச் சொல்லிக்கொண்டே சென்றபோது தேவனின் முகம் ஏனோ திடீரென்று விகாரமடைந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டான்.

"நான் என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தேன் தெரியுமா? விமலனைத் தெரியுமே உனக்கு; அவன் தான் எப்போதும் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருப்பானே... அவனிடம் 'கேமரா' கூடக் கேட்டிருந்தேன், 'காம்ப்'பில் படங்கள் எல்லாம் எடுக்கலாம் என்று!... ஆனால் நீ கிளப்பிவிட்ட வேதனையில அவனிடம் சொல்லிக்காமல்கூட வந்து விட்டேன்!...... போனது போகட்டும்! இனியாவது குழப்பமின்றி இருப்போம்! அடடே!... பந்தய நேரம் நெருங்கி விட்டதே! சீக்கிரம் போகலாம்!',

கண்ணன் துரிதமாக நடந்தான். தேவன் ஏதோ நீண்ட நேர யோசனைக்குப் பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டவனின் முகத் தோற்றத்தோடு வேகமாக நடந்தான்.



தேவன் தங்கியிருந்த கூடாரத்திற்குள் இருவரும் நுழைந்தார்கள். கண்ணன் தங்களது குறுகிய கால நட்பு முறிவு கொடுமையைத் தந்தது என்றும், இனி அந்த நட்பை உடைத்தெறிய உலகில் எந்த சக்தியும் இல்லை என்றும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான்.

ஆனால் தேவனோ, பேசுவதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டுக் கொண்டு 'ஹார்லிக்ஸ்' கரைத்துக் கொண்டிருந்தான்.

அவசரப்படுத்தினான் கண்ணன்.

தேவன் 'ஹார்லிக்சை' அவனிடம் நீட்டினான். ஆனால், அப்போது அவன் கைகளில் தெரிந்த நடுக்கத்தை கண்ணன் புரிந்து கொண்டானோ; என்னவோ தெரியாது. ஆனால் அதைப் புரிந்து கொண்டுவிடக்கூடாதே என்று எண்ணிய தேவன் மட்டும் யாரையோ அழைப்பதைப்போல உடனே வெளியே சென்றுவிட்டான்!

பந்தய மைதானத்திலிருந்து போட்டியில் கலந்து கொள்ள இருப்பவர்களைப் பெயர் சொல்லி அழைத்தார்கள். கண்ணன், தேவன்—இருவரும் கூடாரத்தை விட்டு வெளியே வந்து நடந்தனர்! ஆனால் இருவரது நெஞ்சங்களிலும் இன்னதென்று புரியாத ஏதோ ஒரு கலவரம் இப்போது தோன்றியிருந்தது!

★

பந்தய வீரர்கள் வரிசையாக நின்றார்கள்.

அதோ முதலில் 'எண் ஒன்று' என்ற குறியிட்ட 'பனியன்' அணிந்து முன்னால் நிற்கிறான் கண்ணன்! ஆனால் அவன் முகத்திலே-காத்திருக்கும் பரிசைப் பெறத் துடிக்கும் குதூகலத்தைக் காணோமே; ஏதோ இனம் புரியாத குழப்ப ரேகைகள் அல்லவோ பரவி ஓடுகின்றன!

'எண் இரண்டு' என்று குறித்த 'பனியன்' அணிந்து தேவன் நிற்கிறான், ஓடுவதற்குத் துடிதுடித்துக் கொண்டு!

பந்தயம் துவங்கிற்று; ஓடினர் சிறுவர்கள்; அந்த நீண்ட நேர ஓட்டப் பந்தயத்தைப்பார்க்கக் கூடியிருந்த மற்ற சிறுவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்!

ஆனால்......

சிறிது நேரத்தில் அவர்களது மகிழ்ச்சிக் கூக்குரல் வியக்கத்தக்க வகையில் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக் கொண்டு வந்தது!

காரணம்...?

அவர்களது கண்கள் பந்தய மைதானத்திலே ஓடி வந்துகொண்டிருந்த சிறுவர்களைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கின!

"நம்பர் ஒண் எங்கேடா?"

"யார்? கண்ணன்தானே? அவனைத்தானேடா நானும் தேடுகிறேன்!"

"ஆ, அதோ! அதோ! கண்ணன்! கண்ணன்!..."

—இத்தகைய உவகைச் சுருதி குறைந்த—உற்சாகம் இழந்த சொற்கள் ஆங்காங்கே எழும்பிக் கொண்டிருந்தன.

பந்தயம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.........

மறு எல்லை நெருங்கிக் கொண்டிருந்தது......

பையன்களின் நெஞ்சிலே கலக்கம் வந்தடைந்தது...

ஆனாலும் என்ன பலன்?

வெற்றிக் கம்பத்தைத் தாண்டி முதலில் வந்து நின்றுவிட்டான், கண்ணனல்ல; தேவன்!

ஐயோ......அப்படியானால் கண்ணன் எங்கே...?

மைதானத்தின் எங்கோ ஒரு மூலையில் எல்லோருக்கும் கடைசியாக ஓடிவந்துகொண்டிருந்தான், அவன்!

★

வெற்றிக் கோப்பையைக் கையில் வைத்துக் கொண்டு அழகு பார்த்துக்கொண்டிருந்தான் தேவன்.

ஆனால், அந்த வெற்றிக்குப் பின்னால் ஒரு விபரீத உண்மை—விழிகளைக் குளமாக்கும் ஒரு வேதனையான கதை மறைந்து கிடப்பதை அந்தப் 'பொறுமைப்பேய்' மறந்தே போனான்! நெஞ்சிலே அண்டவும் விடக்கூடாத அந்த நீசத்தனத்தை ஆரத் தழுவி அணைத்துக்கொண்ட அவனது முட்டாளதனத்திற்கு சரியான தண்டனை தரவேண்டாமா?

"தேவா! இந்தா, இதைக் கண்ணன் உன்னிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னான்!" என்று ஒரு சிறுவன் ஒரு காகிதப் பொட்டலத்தை அவனிடம் தந்துவிட்டுச் சென்றான்.

தேவன் நடுங்கும் கைகளுடன் பிரித்தான். முதலில் ஒரு கடிதம்—படித்தான்:

"தேவா! பொட்டலத்தில் உன்னுடைய தூக்க மாத்திரைகளும் வருகின்றன. பைத்தியக்காரா, 'ஹார்லிக்சில்' அவைகளைப் போட்ட நீ கரைத்துவிட வேண்டும் என்பதை ஏன் மறந்து விட்டாய்? அது மட்டுமல்ல; நடு நடுங்கும் கைகளைக் கட்டுப்படுத்தும் சக்தியும் பெற்றிராத கோழையே, நீ இந்த வேலைக்கு வரலாமா? நல்ல வேளை, உன் பைத்தியக்காரத்தனமும், அந்தக் கோழைத்தனமும் என் வரையில் நல்ல பலன் தராமல் போகவில்லை. அந்த மூன்று மாத்திரைகளும் என் வயிற்றுக்குள் போயிருந்தால நீ விரும்பியபடி எனக்கு சாதாரண தூக்கம் மட்டும் வந்திருக்காது. 'நீண்ட தூக்கமே' வந்திருக்கும்! ஆமாம்; நீயும், நானும், யாருமே எதிர்பாராமல் நான் சாவூர் சென்றிருப்பேன்! போகட்டும்; நீ என் நண்பன்! அதனால்தான் துள்ளிப் பாய்ந்த என் கால்களையும் கட்டிப் பிடித்து, கடைசியில் ஓடி வந்து. உனக்குப் பரிசு கிடைக்கச் செய்து விட்டேன்! உன் வெற்றிக்கு வாழ்த்து!

—கண்ணன்."

சிறிது நேரத்திற்கெல்லாம் விம்மி விம்மி அழும் குரல் ஒன்று அந்த அறைக்குள்ளிருந்து எழும்பிக் கொண்டிருந்தது!

—சோர்ணம்.

அருணோதயம்-புதிய வெளியீடுகள்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம் ஏ, எல். டி. எழுதிய

செந்தமிழ்ச் செல்வம்	ரூ. 2—00
கன்னியின் சோதனை	ரூ. 1—00

புகழ் பெற்ற நாடகாசிரியர் 'ரா. வே' எழுதிய

டி. கே. எஸ். சகோதரர்களால் நடித்துப் புகழ் பெற்ற

முதல் முழக்கம் ('கட்டபொம்மன்')	ரூ 2—00
அசோகன் (கி. மா. பக்தவத்சலம்	ரூ. 1—25

திருமணப் பரிசு நூல்கள்

வாழ்க்கையே ஒரு கலை (வே. கபிலன்)	ரூ. 1—00
நலம் பெற்று வாழ்க ,,	ரூ. 1—25
இதய தீபம் (மக்களன்பன்)	ரூ. 1—50

உடனே எழுதுக:

அருணோதயம்

ராயப்பேட்டை, சென்னை-14



சங்கர நாராயணன்; குடந்தை

(?) அருணகிரிநாத - அடிகளாரை நீங்கள் ஏன் உங்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்க அழைத்தீர்கள்?

அடிகளார் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தது தி. மு. கழக மாநாடு அல்ல; இந்தி பொது மொழி எதிர்ப்பு மாநாடு! காவியுடை அணிந்தோரும் தி. மு. க. அணியில் தமிழ்காக்க ஒன்று சேர்கிறார்களே—என்ற ஆட்சியாளர்கள் எண்ணி மூக்கிலே விரல் வைக்கும் அளவுக்கு தமிழ் உணர்ச்சி வளர்ந்திருக்கிறது நண்பரே!

காதர் மோய்தீன்; சென்னை—1

(?) "முதுகுளத்தூரில் என்ன நடக்கிறது?

தமிழர் வீரம் விழலுக்கு இறைத்த நீராகிறது!

என். கே. மைக்கேல்; மதுரை

(?) கனம் கக்கன் தமிழ் நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களது தலைவரா?

அப்படியிருந்தால் அவர் முதுகுளத்தூர் பகுதிக்குச் சுற்றுப் பயணம் நடத்த வேண்டிய இடம் தெற்குச் சீமை கலகப் பகுதிகளாக அல்லவோ இருக்க வேண்டும்!

சோமநாதன்; காரைக்குடி

(?) டி. டி. கே. இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

தேர்தலின்போது இங்கு செய்ததை அமெரிக்காவிலே செய்து காட்டுகிறார். அதாவது முன்பு 'ஓட்டுப் பிச்சை' வாங்கினார். இப்போது 'உதவிப் பிச்சை' வாங்குகிறார்!

முகவரி மாற்றம்

ஏ. கே வில்வம்,

எஸ். ஜி. முதலியார் தெரு,

ஆற்காடு

(வடார்காடு மாவட்டம்)

பிறப்பு

திருச்சி மாவட்டம், அன்னவாசலைச் சேர்ந்த இயக்கத் தோழர் பி. தம்பித்துரை அவர்களது துணைவியார் திருமதி புவனேச்வரி அம்மையார் சென்ற 18-9-57 அன்று பெண்மகவு ஒன்றுக்குத் தாயானார்கள் என்ற செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

புதிய 'போன்' எண்:

திராவிடன்:

55037

16-19, அம்மன் கோயில் தெரு

சென்னை—1

(?) கேரளத்திலே கம்யூனிஸ்ட் கட்சி எப்படி இருக்கிறது?

இப்போதுதான் மத்ய அரசாங்கத்தை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறது!

பி. எம். பாலகிருட்டிணன்;
ராயப்பேட்டை

(?) காந்தியாருக்குக் காங்கிரஸ்காரர்கள் எந்த அளவுக்கு மதிப்பு வைத்திருக்கிறார்கள்?

அக்டோபர் முதல் வாரம் கிடைக்கும்!

★

புலவர் குழந்தை

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

நாஞ்சில் கி. மனோகரன்

நா. பாண்டுரங்கன்

மற்றும் பலரது எழுத்தோவியங்களுடன்!

முத்தாரம்

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச் சிறுகதை உண்டு.

வெளிநாட்டுக் கதைகள்; விஞ்ஞானக் கட்டுரைகள்; வித்தகர் பேருரைகள் அனைத்தும் நிரம்பிய இலக்கியக் கருவூலம்!

★

உங்கள் பிரதிக்கு இன்றே சொல்லிவையுங்கள்!

'தென்றல் திரை'

வீரபாண்டியக் கட்டபொம்மன் சிறப்பிதழ்

★

சிவாஜி கணேசன்; சக்தி கிருஷ்ணசாமி கட்டுரை தருகின்றனர்.

மற்றும்

அறிஞர் அண்ணா; கருணாநிதி; டாக்டர் மு. வ; ரா. பி. சேதுப்பிள்ளை ஏ. வி. மெய்யப்பன்; ம. பொ. சி; கொத்தமங்கலம் சுப்பு; கனம் காமராசர்; முத்தையா செட்டியார்; மேயர் சீனிவாசன் ஆகியோரின் பாராட்டுரைகளும் உண்டு!

விலை 25 காசு

செப்டம்பர் 5-ந் தேதி விற்பனைக்குக் கிடைக்கும்!

திரை கன்சர்ன்ஸ்,

40, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14

மதிப்பாவது, மண்ணாங்கட்டியாவது! முதுகுளத்தூர் பகுதி துப்பாக்கிப் பிரயோக விசாரணையின் போது போலீஸ் அதிகாரி ஒருவர் சொன்ன வாக்குமூலத்தைக் கவனித்தீர்களா?

மக்கள் கலைந்து செல்வதற்காகச் சுடவில்லை; ஆளைக் கொல்வதற்காகத்தான் சுட்டோம்—என்ற பொருள்பட அவர் கூறியிருக்கிறார்!

—பொதுமக்கள் உயிர் மீது வைத்திருக்கும் 'மதிப்பை'த் தான் அவர்கள் காந்தியார் மீதும் வைத்திருக்கிறார்கள்!

கே. வி. சுந்தாராமன்; மதுரை

(?) உலகிலேயே எந்தக் கட்சிக்கு எதிர்ப்பு அதிகம்?

'சினிமா ஒழிப்புக் கட்சி'க்குத்தான்! ஏனெனில் ஒவ்வொரு வாரமும் உலகெங்கும் சினிமா பார்க்கும் இருபத்தி மூன்றரை கோடி பேரை எதிர்க்க வேண்டும் அவர்கள்!

கே. அரியநாயகம்;
உடையார்பாளையம்.

(?) கனம் காமராசருக்கும் சுப்பிரமணியத்துக்கும் மோதல் இருந்ததே; அது எப்படி?

அவர்களுடைய மோதல் கத்திரிக்கோலின் இரு நாக்குகளும் மோதிக் கொள்வதைப் போன்றது. ஆச்சாரியார் இருக்கும்வரை இந்த மோதல் இருக்கும். ஆனால் ஒருவரை யொருவர் ... போதைக்கு வெ... டி கொள்ளமாட்டார்கள்.

தில்லை— சிவசங்கரன்;
அண்ணாமலை நகர்

(?) சில பேச்சாளர்கள் ஊமையாகி விடுகிறார்களே; எதனால்?

முன்னே அமர்ந்திருப்பவர்கள் தங்களிச்சைபோல் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளத் தொடங்கிவிடுகிற காரணத்தால்!

எம். எஸ். சித்திரவேலு;
வேடிச்சிப்பாளையம்

(?) 'கலை விருந்து' என்கிறார்களே; கலை—விருந்தாக முடியுமா?

கலை விருந்தாகலாம் — பிணி ஏதும் இல்லாத நாட்டுக்கு! ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரை இன்றைய தினம் அந்தக் கலையை சமுதாயத்தின் நோய் விரட்டும் மருந்தாகத்தான் பயன்படுத்தி வருகிறது, அறிவியக்கம்!

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	6—50
ஆறு மாதம்	4—00

வெளி நாடு

ஆண்டு சந்தா	7—50
ஆறு மாதம்	4—50

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை